**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரிப்பரீட்சை III 2018**

**வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்**

**வரலாறு I**

**33 T I**

**ஒரு மணித்தியாலம்**

கவனிக்குக.

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாத்தாளுக்கு **80** புள்ளிகள் வழங்கப்படும்.

(ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைத்தாளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையின் இலக்கத்தை புள்ளடியாக (x) இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து பின்பற்றுக

1. இலங்கையின் வரலாற்றினைத் தொடர்ச்சியாகத் தருகின்ற உள்நாட்டு இலக்கிய மூலாதாரமான மகாவம்சம் என்னும் நூலுக்கு எழுதப்பட்ட உரை நூல் (டீகாவ) பின்வருவனவற்றுள் எது?
   1. வம்சத்தப்பகாசினி
   2. சந்தர்மரத்னாவலிய
   3. சமந்தபாசிகா
   4. கந்தவுருசிரித்த
2. இலங்கையின் பௌத்த சாசன வளர்ச்சி மற்றும் அரசியல் தகவல்களை உள்ளடக்கி கம்பளை முதல் கோட்டை இராசதானி வரையிலான வரலாற்றை அறிய உதவும் நூல்கள் முறையே.
   1. பெகும்ப சிரித்த – மயூரசந்தேசய
   2. நிகாய சங்கிரஹய – ராஜாவலிய
   3. செலலிகினி சந்தேசய – நியாய சங்கிரஹய
   4. சீதவாக்க சட்டன - ராஜாவலிய
3. தனது அனுபவங்கள் மூலம் இலங்கை வரலாறு தொடர்பான அறிக்கையை எழுதிய அராபியர்
   1. அல்பலசூரி
   2. பிளினி
   3. இபன்பதூதா
   4. மெகதஸ்தனிஸ்
4. திரிபீட நூலுக்கு மேலதிக விளக்கமான அட்டுவாக்களை எழுதிய புத்தகோசதேரர் கல்விகற்ற விகாரை
   1. அபயகிரி விகாரை
   2. ஜேத்தவனராமய விகாரை
   3. ரூவன்வெலிசாய விகாரை
   4. மகாவிகாரை
5. அநுராதபுரகால மகா விகாரைக்குரிய பிரிவேனாக்கள் இரண்டினைத் தரும் விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.
   1. சுன்ஹாத்த பிரிவெனா, மருகத பிரிவெனா
   2. எலக்க பிரிவெனா, வீதாகம கணாந்த பிரிவெனா
   3. நிக்சந்த செனவிய பிரிவெனா, மருகத பிரிவெனா
   4. காரகல பத்மாவதி பிரிவெனா, மருகத பிரிவெனா
6. இலங்கையின் மிகப்புராதன காலத்தில் வாழ்ந்த மனிதன் பயன்படுத்திய கல்லாயுதங்கள் கண்டறியப்பட்ட படிவு.
   1. பொம்பரிப்புப் படிவு
   2. இரத்தினபுரிப் படிவு
   3. பாகியன்கல படிவு
   4. பட்டதொம்பலெனபடிவு

7. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த தாழ்நில ஈரவலயக் குகைகளைத் தரும் விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.
   1. கித்துள்கல பெலிலெனா, பட்டதொம்பலென , பாகியன்கல
   2. பெல்லன்பதி பெலஸ்ஸ, புந்தல, பதிராஜவெல
   3. சிகிரியா அலிகல, பொத்தான, பதிராஜவெல
   4. பட்டதொம்பலென, பாகியன்கல, புந்தல
8. காட்டுப்பலாவின் விதை தீயில் சுட்டுச் சாப்பிட்டமைக்கான ஆதாரமும், உப்புப் பயன்படுத்தப் பட்டமைக்கான ஆதாரமும் கண்டெடுக்கப்பட்ட குகை.
   1. பாகியன்கல
   2. பட்டதொம்பலென
   3. குருவிட்ட
   4. கித்துள் கலபெலிலென
9. இலங்கையின் முன்வரலாற்றுக்காலப் பண்பாட்டைக் கற்பதற்கு ஆதாரமான பாரிய கற்பாறைகளை ஒன்று சேர்த்து சதுரவடிவில் அமைக்கப்பட்ட கல்லறை மயானங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள்
   1. இப்பன்கட்டுவ, கல்சொஹென், யட்டிகல்பொத்த
   2. இப்பன்கட்டுவ, உடரஞ்சாமடம, ஹல்துமுல்ல
   3. பெரகல, ஹல்துமுல்ல, உடரஞ்சாமடம
   4. பெரகல, கல்கொகன், யட்டிகல்பொத்த
10. வாபிகாம என்பது
   1. மீன்பிடியை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைந்த குடியிருப்பு
   2. குளத்தினை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைந்த குடியிருப்பு.
   3. மட்பாண்டத் தொழிலை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைந்த கிராமம்
   4. மரத்தொழிலை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைந்த கிராமம்.
11. குடியேற்றங்கள் பரவியிருந்த உலர் வலயப் பிரதேசத்தில் குறுநில அலகுகளை நிர்வகித்த பெண்களுக்கு வழங்கப்பட்ட பெயர்.
   1. பருமகர்
   2. கஹபதி
   3. குர்க்கபதி
   4. பருமகலு
12. நாட்டை நிர்வாக அலகாகப் பிரித்து நிர்வகிப்பதற்கு முயற்சி செய்ததுடன் அரச வரி அறவீட்டினையும் முறைமைப் படுத்திய மன்னன்.
   1. வசபன்
   2. பண்டுகாபயன்
   3. துட்டகைமுனு
   4. தேவநம்பியதீசன்
13. 1ஆம் உபதிஸ்ஸ மன்னனால் கர்பிணித் தாய்மார்களின் தேவைக்காக அமைக்கப்பட்ட பிரசவ விடுதிகளுக்கு வழங்கப்பட்ட பெயர்.
   1. வெஜ்ஜசாலா
   2. பஸவந்தி நாமகால
   3. சொத்திசாலா
   4. உபசக்க ரோகநாச
14. சேனைகளை வனவிலங்குகளிடம் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக அதனைச் சுற்றி கம்புகளால் அமைக்கப்பட்ட வேலிக்கு வழங்கப்பட்ட பெயர்.
   1. நியம்மஸ்தான
   2. கலங்க
   3. தகசம் எத்தன்
   4. தண்டு வெட்ட
15. ஹேபிடிகம சந்தையின் நிர்வாகம் தொடர்பாக அரசனால் பிறப்பிக்கப்பட்ட சட்டங்கள் தொடர்பாகக் கூறும் கல்வெட்டு
   1. தோணிகல கல்வெட்டு
   2. மிகிந்தலை தூண் கல்வெட்டு
   3. சொரபொரவாவி தூண்கல்வெட்டு
   4. வேவல் கட்டிய தூண் கல்வெட்டு

16. எலகரக் கால்வாய் மூலம் நீர் கொண்டு செல்லப்பட்ட குளங்கள் மூன்று பின்வருவனற்றில் எவை?
   1. மின்னேரியா, கிரிதலை, கவுடுலு, கந்தளாய்
   2. கலாவாவி, திஸ்ஸாவாவி, கிரிதலை, கவுடுலு
   3. பராக்கிரம சமுத்திரம், மின்னேரியா, கிரிந்தலை, கவுடுலு
   4. குருளுவாவி, மின்னேரியா, கிரிந்தலை, கவுடுலு.

17. நீளத்தை அளப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட மிகச் சிறிய அலகு
   1. அணு
   2. உசக்க
   3. ஆங்குல
   4. பரமாணு

18. புராதன இலங்கையில் நாணயம் அச்சிடுவதற்கு பொறுப்பாக இருந்த அதிகாரிக்கு வழங்கப்பட்ட பெயர்
   1. வாதல்
   2. ரூப்பதக்க
   3. ரதல
   4. மஹமத

19. மேல்வரும் கூற்றுக்களை அவதானிக்குக.
   - காலிங்கராயர், சோடங்கன் என்னும் தளபதிகளின் தலைமையில் இடம்பெற்ற தென்னிந்திய படையெடுப்புக்களை எதிர் கொண்டமை.
   - பாண்டிய மன்னனான குலசேகரனிடம் ஒப்படைக்கப்பட்ட புனித தந்த தாதுவைப் பெற்றுக் கொண்டு வந்து பொலநறுவையில் ஆட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டமை.

   மேற்படி கூற்றுக்களுடன் தொடர்புடைய மன்னர்களின் சோடி இவற்றுள் எது?

   1. 1ம் புவனேகபாகு, 2ம் பராக்கிரமபாகு
   2. 3ம் பராக்கிரமபாகு 2ம் புவனேகபாகு
   3. 1ம் புவனேகபாகு, 2ம் விஜயபாகு
   4. 1ம் புவனேகபாகு, 3ம் பராக்கிரமபாகு

20. மேல் வரும் வரலாற்று நிகழ்வுகளை அவதானித்து அவற்றை அவை இடம்பெற்ற கால ஒழுங்கில் ஒழுங்கு படுத்திச் சரியான விடையைத் தெரிவு செய்க.
   A – பன்சிய பனஸ் ஜாதகய சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டது.
   B - மூன்றாம் விக்கிரமபாகு மன்னனால் அம்பக்க தேவாலயம் அமைக்கப்பெற்றது.
   C – சரசோதி மாலை பக்தி சதகம் போன்ற நூல்கள் எழுதப்பட்டது.
   D – விஜய சுந்தரராமய விகாரை கட்டப்பட்டது.
   1) ADCB
   2) BCAD
   3) DBAC
   4) DABC

21. இலங்கைமீது ஆக்கிரமிப்பினை மேற்கொண்ட தென்கிழக்காசியாவின் மலாயாகுடாநாட்டின் வடபகுதியைச் சேர்ந்த ஆட்சியாளன்.
   1. யுங்லோ
   2. செங்கோ
   3. சந்திரபானு
   4. சோடகங்கன்

22. கண்டி இராச்சியத்தை அண்மித்துள்ள பிரதேசங்களை முதல் முறையாக ஒன்றுபடுத்தி அரசொன்றினை உருவாக்கியதுடன் அவ்விராச்சியத்தின் முதல் மன்னானாகவும் பொறுப்பேற்றவன்.
   1. ஜயவீர மண்டார
   2. ஜோதிய
   3. கரலியத்த பண்டார
   4. சேனாசம்மத விக்கிரமபாகு

கீழ்வரும் அட்டவணையில் A தொடக்கம் J வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 23 ஆம் 24ம் வினாக்களுக்கு விடை தருக.

| தூதுவர்கள் | கண்டியை ஆட்சி செய்த மன்னர்கள் | தூதுவர்களின் தாய்நாடு |
|---|---|---|
| A - ஸ்பில்பேர்ஜன் | D - கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் | G – பிரித்தானியா |
| B - ஜோன்பைபஸ் | E - இராஜாதி இராஜசிங்கன் | H – ஒல்லாந்து |
| C – ரொபட் அன்ரூஸ் | F - 1ம் விமலதர்மசூரியன் | J – பிரித்தானியா |

23. ஒல்லாந்து நாட்டைச் சேர்ந்த தூதுவனின் பெயரையும் அவன் சந்தித்த கண்டி இராச்சிய மன்னனையும் தரும் விடையைத் தெரிவு செய்க.
1. A, E
2. A, F
3. B, D
4. C, E

24. ஜோன்பைபஸின் தாய்நாட்டையும் அவன் சந்தித்த கண்டி மன்னனின் பெயரையும் தரும் விடை
1. J, D
2. G, E
3. H, F
4. J, E

25. கோட்டை இராச்சியத்தின் பாதுகாப்பிற்காக போர்த்துக்கேயரின் உதவியை முதன்முதலாக நாடிய மன்னன்.
1. 6ம் விஜயபாகு
2. தர்மபாலன்
3. 7ம் புவனேகபாகு
4. 8ம் வீரபராக்கிரமபாகு

26. ஒல்லாந்தருக்கும் கண்டி அரசன் 2 ஆம் இராஜசிங்கனுக்கும் இடையில் நல்லெண்ணம் நிலவாமைக்கான காரணம்.
1. போர்த்துக்கேயரை இந்நாட்டில் இருந்து விரட்டுவதற்கு மன்னனுக்கு ஒல்லாந்தர் உதவி வழங்கத் தவறியமை
2. ஒல்லாந்தருக்கு ஏற்பட்ட போர்ச் செலவினை மன்னன் வழங்காமை.
3. போர்த்துக்கேயரின் நிர்வாகத்தின் கீழிருந்த பிரதேசங்களைக் கண்டி இராச்சியத்துடன் இணைத்தமை.
4. ஒல்லாந்தர் தமக்குச் சாதகமான பிரதேசங்களில் இருந்த கோட்டைகளை மன்னனிடம் கையளிக்கத்தவறியமை.

கீழே A தொடக்கம் E வரையில் தரப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 27ஆம் 28ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

A – பெயரளவு நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதிப் பதவி
B – தேசிய அரசுப் பேரவை
C – விகிதாசாரப் பிரதிநிதித்துவம்
D – மனித உரிமைகள்
E – நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி.

27. 1972 அரசியல் யாப்பு சீர்திருத்தத்துடன் தொடர்புடைய விடயங்களை உள்ளடங்கிய விடை யாது
1. A, E
2. B, D
3. A, D
4. B, C

28. 1978 அரசியல் யாப்பில் உள்ளடங்கியுள்ள விடயங்களை உள்ளடக்கிய விடையாது?
1. C,E
2. B,E
3. A,D
4. B,C

29. 1815 கண்டி ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் பிரித்தானியக் கொடி ஏற்றப்பட்டதனைக் கண்டித்து ஆங்கிலேயரின் கொடியை கீழிறக்கி சிங்கக் கொடியை மீளவும் ஏற்றிய தேரர்

1. ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கலதேரர்
2. வாரியப்பொல ஸ்ரீ சுமங்கல தேரர்
3. வஸ்கடுவே ஸ்ரீ சுமதி தேரர்.
4. மீ கெட்டுவத்தே குணானந்ததேரர்

30. 1869 ஆம் ஆண்டில் கோப்பிப்பயிர்ச் செய்கையைத் தாக்கிய நோய்.

1. ஹெமீலியா வெஸ்டாக்கஸ்
2. ஹெமீலியா செரஸ்டாக்ஸ்
3. சிங்கோனா வெஸ்டாக்ஸ்
4. இலைவாடல் நோய்

31. மகாவலி அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட நீர்த்தேக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A – ரந்தெனிவெல நீர்த்தேக்கம்

B – கொத்மலை நீர்த்தேக்கம்

C – ரன்தெம்பே நீர்தேக்கம்

D – விக்டோரியா நீர்த்தேக்கம்

E – மாதுறு ஓயா நீர்த்தேக்கம்

மேற்குறித்த நீர்த்தேக்கங்களுள் சுவீடன், பிரத்தானிய நாடுகளின் உதவியுடன் மேற்காள்ளப்பட்ட நீர்தேக்கத் திட்டங்களைத் தரும் விடை எது?

1. A, E
2. B, D
3. C, D
4. E, C

32. சைவப்பிகாச வித்தயாசாலை, சைவபரிபாலனசபை போன்றவற்றை அமைத்து இந்து சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர்.

1. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்
2. சேர். பொன் இராமநாதன்
3. சேர். பொன் அருணாசலம்
4. எஸ். நடேசு ஐயர்.

33. மறுமலர்ச்சிக் காலத்தில் இலக்கியத்துறையில் பணியாற்றிய இங்கிலாந்து எழுத்தாளர்.

1. காந்தே
2. இராஸ்மஸ்
3. பெற்றாக் பொக்காஷியோ
4. வில்லியம் ஷேக்ஸ்பியர்

34. பல்வேறு கண்டுபிடிப்புக்களைச் செய்த சிலரின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A – ரைட் சகோதரர்கள்

B – ஜென்ரோட்டல்

C – ஹென்றி பேஸ்மர்

D – ரொபட் பெக்வெவல்

E – றிச்சாட் ஆர்க்ரைட்

மேலே பெயர் குறிப்பிடப்பட்டவர்களுள் கைத்தொழிற் புரட்சியின் போது விவசாயத்துறையுடன் தொடர்புடைய கண்டுபிடிப்புக்களைச் செய்தோரைத் தரும் விடை

1. A, D
2. B, E
3. B, D
4. C, E

35. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்குரிய தாசாப்பங்களிலும் கைத்தொழிற்துறையில் அதிக வளர்ச்சியைப் பெற்ற ஒரே ஆசிய நாடு
1. ஜப்பான்
2. சீனா
3. இந்தியா
4. தாய்லாந்து

கீழே A,B,C,D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்திற் கொண்டு 36 தொடக்கம் 38 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

| | | |
|---|---|---|
| A – | 1. ஜேர்மனி | 2. வேர்செல்ஸ் உடன்படிக்கை |
| B – | 1. ஒட்டோவன் பிஸ்மார்க் | 2. குடியேற்ற நாடுகள் உருவாக்கப்படல் |
| C – | 1. சரஜிவோ நிகழ்வு | 2. 1ஆம் உலக யுத்தம் |
| D – | 1. ஐக்கிய அமெரிக்கா | 2. லூசியானா கப்பல் தாக்கப்படல் |

36. இரண்டாவதன் காரணமாக முதலாவதற்குத் தண்டனை வழங்கப்பட்டதனைத் தரும் விடை சோடியைத் தெரிவு செய்க.
1. A
2. B
3. C
4. D

37. முதலாவது ஏற்பட்டதன் விளைவாக இரண்டாவது சம்பவம் நடைபெற்றதனைத் தரும் விடைச் சோடியைத் தெரிவு செய்க.
1. D
2. B
3. C
4. A

38. முதலாவதற்கும் இரண்டாவதற்கும் எந்த வித தொடர்புமில்லாத விடைச் சோடியைத் தெரிவுசெய்க.
1. A
2. B
3. C
4. D

39. “சட்டத்தின் சாரம்” என்னும் நூலை எழுதியவர்
1. ரூசோ
2. வோல்டேயர்
3. அடம்ஸ்மித்
4. மொன்டெஸ்கியூ

40. கூட்டுச் சேரா (அணிசேரா) நாடுகளின் அமைப்பு உருவாக்கப்படுவதற்கு தலைமையேற்று செயற்பட்ட எகிப்து நாட்டின் ஜனாதிபதி .
1. ஜவகர்லால் நேரு
2. லீ வொங் யு
3. மார்ஷல் டிற்ரோ
4. அப்துல் கமால் நாசர்.